# வருடாந்த செயல்முன்னேற்ற அறிக்கை

# 2015



## தாவரவியற் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

## தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்

## பேராதனை

# இலங்கையில் தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி தொடர்பான பொறுப்பு நிதியம்

## வருடாந்த அறிக்கை 2015

இலங்கையில் தாவரவியல் பூங்காக்களை மேம்படுத்தல் மற்றும் நலன்புரி தொடர்பாக நிதியமொன்று என்ற அடிப்படையில் அப்போதைய விவசாயம் காணி மற்றும் வன வள அமைச்சரினா்ல சமர்ப்பிக்கப்பட்ட 1995.12.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கவனத்திற் கொண்டு 1996.02.07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தாவரவியல் பூங்கா அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி தொடர்பாக நம்பிக்கை நிதியமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் 25 சதவீதம் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி தொடர்பான நம்பிக்கை பொறுப்புநிதியத்திற்கு வருமானமாக பெயரளவில் செலவு வைக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஒவ்வொரு வருடமும் திறைசேரியின் அங்கிகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் 2201 செலவீனத் தலைப்பு (மூலதன மாற்றத்தன்) இன் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிதியத்தின் செலவீனங்களை மேற்கொள்வதற்கு தேவையான நிதி, தேவைக்கு ஏற்ப திணைக்களத்தின் முற்பணக்கணக்கிலிருந்து பெறப்பட்டு வருட நிறைவின் போது மீளளிப்புச் செய்யப்படும். மேலதிகமாக நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியம் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் நிருவகிக்கப்படுவதுடன், அந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவராக நிரல் அமைச்சின் செயலாளலரும், நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் செயலாளராக தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கத்தவர்களாக பொதுத் திறைசேரியின் வரவு செலவுத்திட்டப் பணிப்பாளரும் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

## தாவரவியல் பூங்கா நம்பிக்கை நிதியம்

1. **நிதியத்தின் பெயர்: இலங்கை தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் நல்னபுரிக்குமான நம்பிக்கை நிதியம்**

2. **தன்மை : தாவரவியல் பூங்கா அபிவிருந்திச் செயற்பாடுகள், நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவீனச் செயற்பாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குதல்.**

3. **உரிய சுற்றுநிருபம் : I நிதியத்தை ஆரம்பித்தல் - 1917 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிதியக் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப**

   **II கணக்கு வைத்தல் மற்றும் கணக்கு அறிக்கைகளை மேற்கொள்ளல் திறைசேரி சுற்றறிக்கை 1977 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 836 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2006.12.22 ஆம் திகதி வெளியீடு செய்யப்பட்ட அரச நிதிசுற்றறிக்கை PF/423 இற்கு ஏற்ப**

4. **ஆரம்பிக்கப்பட்ட திகதி : 1996 திசம்பர் 20**

5. **அலுவலகம்** : பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம்

6. **வங்கி : பேராதெனிய இலங்கை வங்கி : கணக்கு இல 0007040848**

## 7. நிதியத்தின் குறிக்கோள்கள்

- **இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாவரவியற் பூங்கா பற்றி நிலவுகின்ற விம்பத்தை மேலும் சிறந்தாக்கும் நடவடிக்கைகளை எடுத்தல்.**
- **சுற்றாடல் கற்கை மற்றும் தாவரங்கள் பற்றிய தற்பொழுது நிலவுகின்ற பாதுகாப்பு தொடர்பில் ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி மேற்கொண்டு நடாத்துதல்.**
- தாவரவியற் பூங்கா சேவையாற்றுகின்ற விஞ்ஞானிகளின் விஞ்ஞான ரீதியான அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகைள மேம்படுத்தல் மற்றுமல்லாது உரிய செயற்பாடுகள் தொடர்பாக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ரீதியான நன்கொடைகளை வழங்குதல்.
- தாவர சேர்க்கை பற்றிய முன்னேற்றமான நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்குதல்.
- தாவரவியற் பூங்காவின் பயன்பாடுக்காக சுற்றாடல் கல்விசார் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தொழில்நுட்பத் துறைகளில் செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் அவற்றிற்கு நன்கொடை வழங்குதல்.
- விஞ்ஞானிகளுக்கும் தாவரவியற் பூங்காவிற்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குவது தொடர்பாக தேவையான திடீர் நிர்மாணிப்பு செயற்பாடொன்றை பொறுப்பேற்றல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.

### 2015 ஆம் ஆண்டில் நிதியத்தின் முன்னேற்றம்

2015-01-01 ஆம் திகதியில் செலவு மீதி= ரூ. 124,411,696.21

**கூட்டு::**

2015 ஆம்ஆண்டில் வருமானம் (செலவு வைப்பு)= ரூ. 109,624,910.00

--------------------

மொத்தம் ரூ 234,036,606.21

**கழி::**

2015 ஆம் ஆண்டில் செலவீனம் (வரவு வைப்பு) = ரூ. 88,638,951.56

--------------------

2015.12.31 ஆம் திததியில் திறைசேரி நிலுவை = **ரூ. 145,397,654.65**

* (இந்த நிலுவை பெயரளவு நிலுவையாக காணப்படுகின்றது)

**நிதியத்தின் பிரதான குறிக்கோளாக இருக்கின்ற இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையின் தாவரவியற் பூங்கா பற்றிய காணப்படுகின்ற விம்பத்தை மேலும் உயர்த்துவதனை இலக்காகக் கொண்டு கீழ் குறிப்பிட்ட நடவடிக்கைகள் நிதியத்தின் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.**

- தாவரவியற் பூங்கா ஆராய்சியின் கீழ் உள்நாட்டுத் தாவரங்களின் பாதுகாப்பு மற்றும் தாவரங்கள் பற்றிய தரவுகளை சேகரித்தல் தொடர்பாக தேசிய தாவரக் களஞ்சியத்தினால் முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தின் நதி ஏற்பாட்டை பயன்படுத்தி தாவர மாதிரிகளின் சேர்ப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



சேகரிக்கப்பட்ட தாவர மாதிரியொன்று

- தாவரவயியற் பூங்காக்களில் சேவையில் ஈடுபடுகின்ற விஞ்ஞானிகளின் மற்றும் ஏனைய தொழில்நுட்ப அலுவலர்களின் இலங்கையில் பூக்கள் பற்றிய அறிவு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பாக இந்த வருடத்தில் ரோயல் தாவரவியற் பூங்காவிற்கு இலங்கையின் மலர்கள் பற்றிய விளக்கங்கள் அடங்கிய கை நூலொன்றான “ Illustrated Field Guide to the Flowers of Sri Lanka” புத்தக தொகுதி இரண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.




கொள்வனவு செய்யப்பட்ட 2 புத்தகங்கள்

- நிதியததின் நிதி ஏற்பாடு செய்து கொண்டு கல்விப் பயிற்சி நிலையங்களினால் உள்நாட்டு மலர் செய்கையாளர்கள் தொடர்பாக பூந்தோட்ட அலங்காரப்படுத்தல், பூச் செய்கை, தாவர உருவாக்கம் மற்றும் நாற்றுக்களை இனங்கண்டு கொள்ளல் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுவதுடன் இந்த பயிற்சியளித்தல் தெரிவு செய்யப்பட்ட தாவரவியற் பூங்கா அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக நடைபெறும்.

- தாவரவியற் பூங்கா பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்களின் மற்றும் மாணவர்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் தேசிய பூக் களஞ்சியத்தினால் இலங்கையில் மலை நாட்டில் பாசித் தாவரங்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வின் தரவுகள் உள்ளடக்கப்பட்ட பாசித் தாவரங்கள் பற்றி புதிதாக அச்சிடப்பட்ட “MOSS FLORA IN CENTRAL HIGHLANDS OF SRI LANKA” புத்தகம் விற்பனைக்கு தாவரவியற் பூங்காக்களின் விற்பனை நிலையங்களில் காணப்படுகின்றது.




“ MOSS FLORA IN CENTRAL HGHLANDS OF SRI LANKA”

- இதற்கு மேலதிகமாக இலங்கையில் காட்டுப் பூக்கள் தொடர்பான விளக்கங்கள் உள்ளடக்கப்பட்ட “ Beautiful Wild Flowers Of Sri Lanka” புத்தகத்தை அச்சிடுவதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அது 2016 ஆம் ஆண்டில் விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- *2015.04.26 ஆம் திகதி முதல் 2015.05.01 ஆம் திகதி வரை நடைபெற்ற 09 ஆவது தாவரவியற் பூங்கா ஆராய்ச்சி பற்றிய சர்வதேச மாநாட்டிற்கு பங்குபற்றி பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்தி இலங்கையில் தாவரவியற் பூங்காக்களில் விஞ்ஞானிகளின் அறிவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

- சேவை செயலமர்வு நடாத்துவதன் ஊடாக அலுவலர்கள் மற்றும் சேவை அறிவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- தாவரவியற் பூங்காக்களில் பார்வையாளர்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் பூங்காவினுள் பார்வையாளர்களுக்கு பிரயாண வசதிகளை ஏற்பாடு செய்யும் நோக்கில் பஸ், பெட்டரி கார் அமர்க்கைகள் 08 கார் 05 மற்றும் 04 கார் 05 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பற்றறிக் கார்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிதியத்தின் மேலதிக வருமானத்தை ஈட்டும் தன்மையும் அதிகரித்து வருகின்றது. அதன் பிரகாரம் 2015 ஆண்டில் பெற்றரிக் கார் வருமானம் ரூ. 9.00 மில்லியன்கள் நிதி உழைக்கப்பட்டுள்ளது. இநத் கார்கள் பேராதெனிய ரோயல் தாவரவியற் பூங்கா, அவிஸாவெல தாவரவியற் பூங்கா மற்றும் ஹம்மாந்தோட்டை பூங்காக்களில் பார்வையாளர்களின் வசதிக்காக ஓட்டத்தில் விடப்பட்டுள்ளது.



கொள்வனவு செய்யப்பட்ட பற்றரிக் கார் ஒன்று பார்வையாளர்களுடன் ஹக்கல தாவரவியற் பூங்காவில்



கொள்வனவு செய்யப்பட்ட பெற்றரிக் கார் வாகனம் ஹம்பாந்தோட்டை பூங்காவினை பார்வை பார்வையிடும் வேளை



கொள்வனவு செய்யப்பட்ட பற்றரிக் கார் ஒன்று பார்வையாளர்களுடன் பேராதெனிய தாவரவியற் பூங்காவில்

- இந்த வருடத்தில் தாவரவியற் பூங்காவில் பார்வையாளர்ளினை கவர்ந்து கொள்வதற்காக மிகவும் காண்காட்சியான தாவரவியல் பூங்காவை பராமரிப்பதற்கு நிதியத்தின் நிதியிலிருந்து நிதி ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் கவர்ச்சிகரமான மட்டத்தில் வருடத்தின் போது நடாத்திச் செல்லப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய இனங்களுடன் பூ நாற்றுக்கள் மற்றும் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு மலர் பாத்தி மற்றும் மேடைகள் அலங்கார அமைப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**<u>பேராதனை பூங்காவில் அலங்காரம் செய்யும் நோக்கில் தயார் செய்யப்பட்ட மலர் தோட்டங்களின் படங்கள் சில</u>**







**ஹக்கல தாவரவியற் பூங்கா வசந்தகாலம் தொடர்பாக தயார் செய்யப்பட்ட மலர் தோட்டங்களின் காட்சிகள் சில**









**<u>கம்பஹா தாவரவியற் பூங்காவில் அலங்காரப்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்ட மலர் தோட்டமொன்றின் காட்சி</u>**





**<u>அவிசாவலை தாவரவியற் பூங்காவில் ரோஜா பூந் தோட்டத்தின் காட்சியொன்று</u>**



## நிதியத்தின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேடமான அபிவிருத்தி செயற்பாடுகள்.

### பேராதனை அரச தாவரவியற் பூங்கா

- இந்த வருடத்தில் பேராதெனிய ரோயல் தாவரவியற் பூங்காவில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நவீன வகையில் நாற்றுத் தாவரங்கள் 15 மில்லியன்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.



பேராதனை தாவரவியல் பூங்காவில் நிர்மாணிக்கப்படும் தாவர இல்லம்

- பார்வையாளர்களின் மனங்களை கவர்ந்து கொள்ளும் நோக்குடன் புதிதாக பூப் பொய்கையெனா்று ரூ. 1.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பூந்தோட்டத்தின் புதிய தோட்டப் பகுதி பார்வையாளர்களின் மனதினை கவரும் வகையில் காட்சியாக தயார் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ரோயல் தாவரவியற் பூங்காவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பூப் பொய்கை

- ரோயல் தாவரவியற் பூங்காவின் துணை வீதிகள் ரூ. 2.1 மில்லியன் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டன. அதன் பிரகாரம் பார்வையாளர்களுக்கு இலகுவாகவும் பாதுகாப்பாக நடந்து செல்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

- பேராதெனிய பூங்காவினைப் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளின் வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் உணவுகளை சாப்பிடுவதற்கு நிரமாணிக்கப்பட்டிருந்த மண்டபங்கள் 2 ரூ. 1.9 மில்லியன் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.



நவீன மயப்படுத்தப்பட்ட உணவு சாப்பிடும் மண்டபம்

- பேராதெனிய தாவரவியற் பூங்காவினை பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் துப்பரவு ஏற்பாட்டு வசதிகளை வழங்கும் நோக்கில் ரூ. 1.9 மில்லியன்கள் செலவில் கழியலறை தொகுதியொன்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நவீன மயப்படுத்தப்பட்ட கழியலறை கட்டிடத்தொகுதி

- பார்வையாளர்கள் பூந்தோட்டத்திற்கு நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் வசதிகளை வழங்கும் நோக்கில் கண்ணோருவ பகுதியில் ஹேல்லேன பாலத்தின் ஊடாக பூங்காவிற்கு பிரவேசிப்பதற்கும் மற்றும் வெளியேறுவதற்கும் இயலும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் ஹெல்லேன்ன பாலத்தின் ஊடாக பூங்காவிற்கு நுழையும்போது பார்வையாளர்களுக்கு மனோரம்யமான விதத்திலான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை உள்ளது. இது தொடர்பாக ரூ. 1.4 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளன.



0

கண்ணொருவ நுழைவுச் சீட்டு கருமபீடம்

## ஹக்கல தாவரவியல் பூந்தோட்டம்

- ஹக்கல் தாவரவியற் பூந்தோட்டத்தில் கீழ் குறிப்பிட்ட அபிவிருத்தி பணி நிதியத்தின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- ஹக்கல பூங்காவினுள் நுழைவதற்கு தற்பொழுது உள்ள நுழைவு வாயில் பார்வையாளர்கள் அனேகமானவர்கள் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் நெரிசலுக்கு உள்ளாவதுடன் பூங்காவினுள் பார்வையாளர்களை பிரவேசிப்பதற்கு புதிய பிரவேச கட்டத்தொகுதியுடன் கூடிய பிரவேச நுழைவாயில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ. 12 ஆகும்.



ஹக்கல பூந்தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புதிய பிரவேச கட்டிடத்தொகுதி

- ஹக்கல தாவரவியற் பூந்தோட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக தற்பொழுது இருக்கின்ற அலுவலர்களுக்கு, ஊழியர்களுக்கு அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் அதன் பிரகாரம் அவர்களுடைய அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தற்பொழுது உள்ள சிறிய அலுவலகம் போதியளவாக இல்லாததுடன் தற்பொழுது உள்ள அலுவலக கட்டத்ததொகுதியினை இரண்டு மாடியாக மேம்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான அங்கிகரிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ. 6.7 மில்லியன்கள் ஆகும்.



ஹக்கல தாவரவியல் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய அலுவலகக் கட்டிடம்

- ஹக்கல தாவரவியல் பூங்கா கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன் அலுவலர்கள் தொடர்பாக வதிவிட வசதிகளை வழங்க வேண்டி உள்ளது. அதன் பிரகாரம் பதவியணிக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் இரண்டு ரூ. 6.6 மில்லியன்கள் செலவில் (உரிய மதிப்பீடு) நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



**ஹக்கல தாவரவியல் பூங்காவின் நிர்மாணிக்கப்பட்டு வரும் பதவியணி உத்தியோக பூர்வ இல்லங்கள்**

## <u>கம்பஹா தாவரவியற் பூங்கா</u>

பார்வையாளர்களுக்கு ஒக்கீட்ஸ் பூ பயிர்ச் செய்கை தொடர்பான அறிவினை வழங்குவதனை இலக்காகக் கொண்டு அந்த விடயங்கள் தொடர்பாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அந்தூரிய நாற்றுக்கள் ஷரூ. 21.3 மில்லியன்கள் செலவில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிர்மாணிப்பு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



**கம்பஹா தாவரவியல் பூங்காவின் நிர்மாணிப்பு செய்யப்பட்டு வருகின்ற ஒக்கிட் தாவர இல்லம்**

## அவிசாவலை ஈரவலய தாவரவியல் பூங்கா

- அவிஸ்சாவலை தாவரவியல் பூங்காவினைப் பார்வையிடுவதற்கு வருகை தருவோர் தொடர்பாக திறந்து வைப்பதற்கு முன்பாக நுழைவாயிலில் வேலி மற்றும் கேட் அமைக்க வேண்டியுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த நிர்மாணிப்பு 2014 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் திறந்து வைக்கப்பட்டது. அதன் பணிகள் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்பட்டது. இது தொடர்பாக நிதியத்திலிருந்து ரூ. 11 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.

- அவிசாவளை தாவரவியல் பூங்காவினை பார்வையிடுவதற்கு வருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் வாகனங்களை தரித்து வைப்பதற்கு வாகன தரிப்பிடமொன்று 2014 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டின் போது மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் மற்றும் மதிப்பீட்டுக்கு ஏற்ப நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது 2015 ஆம் ஆண்டில் நிறைவ செய்யப்பட்டது. அது தொடர்பாக ரூ. 27 மில்லியன்கள் நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.
- அவிசாவளை சீத்தாவக்க ஈர வலய தாவரவியல் பூங்கா 2015 மார்ச் மாதம் 25 ஆம் திகதி பொதுமக்களின் பாவனைக்கான திறந்து வைக்கப்பட்டது.



அவிசாவளை தாவரவியல் பூங்காவின் நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்ட வேலி மற்றும் நுழைவாயில்



அவிசாவளை தாவரவியல் பூங்காவின் நிர்மாணிப்பு நிறைவு செய்யப்பட்ட வாகனங்கள் தரித்து வைக்கும் இடம்.



அவிசாவளை தாவரவியல் பூங்காவின் பொய்கை மற்றும் சுற்றுச் சூழல்.

## நிதியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிய சுருக்கம்

| | பணிகள் | மதிப்பீடு (ரூ) | 2015.12.31 ஆம் திகதிக்கு மொத்தச் செலவீனம் (ரூ.) | எஞ்சிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் நிருவாக நடவடிக்கைகளுக்கான செலவீனம் | 400,000.00 | 373,087.80 | 26,912.20 |
| 2 | தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை அதிகரிப்பதற்கான செலவீனம் | 35,570,000.00 | 33,216,787.18 | 2,353,212.82 |
| 3 | பேராதெனிய ரோயல் பூங்காவின் அபிவிருத்திச் செலவீனம் | 33,350,000.00 | 27,186,014.82 | 6,163,985.18 |
| 4 | ஹக்கல தாவரவியல் பூங்காலின் அபிவிருத்திச் செலவீனம் | 8,830,000.00 | 6,762,272.46 | 2,067,727.54 |
| 5 | கம்பஹா தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவீனம் | 5,500,000.00 | 5,111,444.32 | 388,555.68 |
| 6 | அவிசாவளை ஈர வலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திச் செலவீனம் | 350,000.00 | 329,983.61 | 20,016.39 |
| 7 | தேசிய தாவர களஞ்சியத்தின் அபிவிருத்திச் செலவீனம் | 16,000,000.00 | 15,659,361.37 | 340,638.63 |
| | மொத்தம் | 100,000,000.00 | 88,638,951.56 | 11,361,048.44 |

| | |
|---|---|
| ஆர்.எம்.டி.பி. மீகஸ்முள்ள<br>தாவரவியல் பூங்காப் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவர் மற்றும் செயலாளர்<br>வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | கே.என். யாபா<br>தாவரவியல் பூங்காப் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம்<br>தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் |